**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திருமதி. சு. லீலாவதி உண்ணி,**
**மேயர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,**
**(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)**

**ந.க.எண் : 4282 / 2014 / எம்சி. 8 நாள் : 23.06.2014**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **25.06.2014** புதன்கிழமை காலை **10.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் (பொறுப்பு) அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஜுன் 2014

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொறியியல் பிரிவு - தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல் - ஒப்பந்த காலம் முடிவடைந்தது – ஒப்பந்த காலத்தை 3 மாதத்திற்கு நீட்டிப்பு செய்தல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - மேற்கு மற்றும் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் தெரு விளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - கூடுதலாக தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டதால் அனுமதிக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டது – தற்போதுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ. 164.01 இலட்சம் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் தெரு விளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - கூடுதலாக தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டதால் அனுமதிக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டது – தற்போதுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ. 212.52 இலட்சம் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் தெரு விளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - கூடுதலாக தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டதால் அனுமதிக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டது – தற்போதுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ. 109.35 இலட்சம் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் தெரு விளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - கூடுதலாக தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டதால் அனுமதிக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டது – தற்போதுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ. 126.70 இலட்சம் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக்கிடக்கு நுழைவாயில் அருகில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 74.10 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக்கிடக்கு ஆர்.ஏ.எப். குடியிருப்பு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 74.85 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பணியமைப்பு - திரு. ந. பத்மநாபன், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் - சட்ட அலுவலர் பதவி உயர்வு வழங்கக் கோரியது – உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகிய இரு நிலைகளை கடந்து விதிதளர்வு செய்து சட்ட அலுவலர் பதவி உயர்வு வழங்குதல் - நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - கோவை மாவட்ட வனச்சரகத்திற்கு உட்பட்ட கோவை குற்றாலம் நீர்வீழ்ச்சி பகுதியில் 6 நடமாடும் கழிப்பிடங்கள் வழங்கப்பட்டது – கழிப்பிடம் ஒன்றுக்கு ரூ. 34,550 வசூலிக்கப்படுதல் - தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து இலவசமாக வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 10 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 36- அரவிந்த் கண் மருத்துவமனை – கோவல் டிரஸ்டின் சொத்துவரி விதிப்பின் விலக்கின் மீதான சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரையின்படி கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் செலுத்திய சொத்துவரி தொகை ரூ.50,64,662.35–ஐ திரும்ப வழங்குதல் - சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - வாகனங்கள் - அலுவலர்கள் பயன்பாட்டிலுள்ள பழைய வாகனங்களுக்கு மாற்றாக புதியவைகள் வாங்கிய பின் கழிவு செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 12 | பொறியியல் பிரிவு - உக்கடம் பெரியகுளக்கரையினை பலப்படுத்தி தடுப்பு வேலி, நடைபாதை, மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு சாலை அமைத்தல் பணி – 2014-15 ம் நிதியாண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளுதல் - மதிப்பீடு 4.95 கோடி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 3 - சுப்பிரமணியன்பாளையம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள ரேசன் கடை - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 14 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 100 – கார்மல் நகர் வீதியில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடை – குனியமுத்தூர் கோ-ஆப்ரேடிவ் ஸ்டோருக்கு வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 100 – மேட்டுர் ஆடிட்டல் வீதியில் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடை – கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு வாடகை நிர்ணயம் செய்த ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 17 – மருதமலை அடிவாரத்தில் உள்ள புதிய கடைகள் - பொது மின்ஏலம் விடுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 24 – மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதியதாக கட்டப்பட்ட கடைகள் - மற்றும் வார்டு எண் 23 D.B. சாலையில் முதல் தளத்தில் உள்ள கடை - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம்- வணிக வளாக கடைகள் - மூன்றாண்டு காலம் முடிவுற்ற கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - உரிமம் புதுப்பிக்காத நபர்களின் உரிமத்தை ரத்து செய்து கருப்புப் பட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.71 - காமராஜ் சாலையிலுள்ள கடை எண்.1 மற்றும் 2- உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 84 – உக்கடம் புதிய மீன்மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாக கடைகள் 68 - மூன்றாண்டு காலம் முடிவுற்ற கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - உரிமம் புதுப்பிக்காத நபர்களின் உரிமத்தை ரத்து செய்து கருப்புப் பட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 21 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மற்றும் உக்கடம் பேருந்து நிலையங்களில் தமிழ் புத்தக கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.68 - சூரியன் வீதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்தை பொதுமக்கள் உபயோகப்படுத்தும் வகையில் வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 23 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 54 மத்திய பேருந்து நிலையம், வார்டு எண் 52 டாக்டர் இராதாகிருஷ்ணா ரோடு, வார்டு எண் 51 பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்தல் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - உரிமம் புதுப்பிக்காத நபர்களின் உரிமத்தை ரத்து செய்து கருப்புப் பட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 24 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54- நஞ்சப்பா ரோடு நடைபாதை கடைகளுக்கு கணினியில் உள்ள பழைய கேட்புகளை நீக்கம் செய்தல் மற்றும் நெடுஞ்சாலை துறையின் விரிவாக்க பணிகளுக்காக மேற்படி இடத்திலுள்ள கடைகளை அப்புறப்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 25 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 – காந்திபுரம் 8ம்-நம்பர் சீனிவாசபுரம் தினசரி காய்கறி மற்றும் மாமிச அங்காடி கடைகள் - மூன்றாண்டு காலம் முடிவுற்ற கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - உரிமம் புதுப்பிக்காத நபர்களின் உரிமத்தை ரத்து செய்து கருப்புப் பட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 26 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.25 - கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட் சாலை) கடை எண். 1, 2, 3 மற்றும் 4 – உயர்ந்தபட்ச ஏலக்கோரிகையை ஏற்று உரிமம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 27 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம்- சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து நேரம் காப்பாளர் அறைகள் - 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 28 | கல்வி பிரிவு – மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 11 முதல் 12-ம் வகுப்பு வரை அறிவியல் பிரிவில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு அறிவியல் கால்குலேட்டர் மற்றும் இதர பிரிவுகளில் பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு சாதாராண கால்குலேட்டர் வழங்குதல் - மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 29 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54- காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண்.4ஐத் தவிர்) கட்டணம் வசூலிக்கும் உரிமம். - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் திரு.இரா. செந்தில்வேல் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – ஏலத்தொகை செலுத்தாததால் ஏலத்தொகைகளை பறிமுதல் செய்து மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு -இந்திய மற்றும் ஐரோப்பிய உள்ளாட்சி அமைப்புகள் ஒருங்கிணைந்து சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் நவீன தொழில் நுட்பம் மற்றும் மின்சக்தி மேம்பாடு மூலம் சிறந்த சுற்றுச் சூழல் நகரம் அமைப்பதற்குரிய கருத்துரு UN-Habitat கோரப்பட்டது – நவீன கருத்துருக்களை தயார் செய்தல் மற்றும் பரிமாறிக் கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 31 | நகரமைப்புப் பிரிவு - நிலப்பரிவர்த்தனை – உத்தேசம் PSG & Sons அறக்கட்டளை – சௌரிபாளையம் கிராமம் க.ச.எண்.304/1-ல் உள்ள 0.85 ஏக்கர் (0.33 ஹெக்) விஸ்தீர்ணமுள்ள பட்டா நிலத்தினை அரசுக்கு ஒப்படை செய்தல் - சௌரிபாளையம் கிராமம் 0.82 ஏக்கர் நிலத்தினை அறக்கட்டளைக்கு பரிவர்த்தனை செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 32 | பொது சுகாதாரம் - மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரித்தல் - ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களை நியமித்தல் - மதிப்பீடு ரூ. 210 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 33 | பொது சுகாதாரம் - தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரித்தல் - ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களை நியமித்தல் - மதிப்பீடு ரூ. 396 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 34 | பொது சுகாதாரம் - மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரித்தல் - ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களை நியமித்தல் - மதிப்பீடு ரூ. 544 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | பொது சுகாதாரம் - வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரித்தல் - ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களை நியமித்தல் - மதிப்பீடு ரூ. 459 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | பொது சுகாதாரம் - கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரித்தல் - ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களை நியமித்தல் - மதிப்பீடு ரூ. 397 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 37 | பணியமைப்பு - சென்னை உயர்நீதி மன்றத்தில் மாநகராட்சி வழக்குகளில் ஆஜராக திரு. சிவக்குமார் வழக்கறிஞர் அவர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

**(குறள் - 111)**

**விளக்கம்**

காண்பவை, கேட்பவை எல்லாவற்றையும் பகுத்தறிவால் ஆராய்ந்து நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து, சமுதாயத்தில் மக்களின் தேவை அறிந்து ஒழுகுதல் நடுவுநிலைமை எனப்படும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

**பொருள்:** மாநகராட்சிப் பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல் – பணி நீட்டிப்பு செய்தல் தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் 22.7.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி மாமன்றத் தீர்மானம் எண் 155 நாள் 29.8.2013 ன்படி திரு.K.S.பாரதி ஒப்பந்ததாரால் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை வரும் 13.5.2014 வரை மட்டுமே போதுமானதாக உள்ளது.

மேலும், இப்பணிக்கான புதிய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி மாமன்றத்தின்அனுமதி பெற்ற பின்னரே பணி மேற்கொள்ள இயலும். இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தாலும் கோடைகால குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டும், தற்சமயம் பணி மேற்கொண்டு வரும் திரு.K.S.பாரதி, ஒப்பந்ததாரர் மூலமாக நடைமுறையில் உள்ள விலைப்புள்ளி அடிப்படையில், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் தேர்வு செய்யும் வரை 3 மாதத்திற்கு பணி மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 5087 /2013/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மற்றும் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,94,00,000/– மாமன்றம் தமது தீர்மான எண் 108 நாள் 1.6.2012 மற்றும் வேலை உத்திரவு நாள் 25.6.2012 ன் படியும் தி/எ.சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கப்பட்டு 26.6.2012 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பொழுது மதிப்பீட்டில் 8146 விளக்குகள் பராமரிக்கவும், தெருவிளக்கு உதிரி பாகங்கள் மாற்றியமைக்க ஆண்டொன்றிற்கு ரூ3.00 லட்சம் செலவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சேதமடைந்த உதிரி பாகங்கள் மாற்றியமைக்க தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பணி ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வார்டு பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை வகைப்படுத்தி கம்பஎண் இடப்பட்டதில் 10040 தெருவிளக்குகள் உள்ளதாக மாநகராட்சிக்கு அறிக்கை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலானவை 15 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாலும் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் பழுதடைந்த தெருவிளக்கு புதைமின் கேபிள்கள் மற்றும் உதிரிபாகங்கள் அவசர அவசியம் கருதி இம்மதிப்பீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டதாலும் கூடுதலாக 1894 தெருவிளக்குகளை பராமரிக்கப்பட்டதாலும் அனுமதிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,94,00,000/– ம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தெருவிளக்குகளின் அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.7,81,000/– வீதம் 21 மாதங்களுக்கு ரூ.164.01 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே இப்பணி அத்தியாவசிய பணியாதலால் ஒப்பந்த காலம் வரை பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ164.01 லட்சத்திற்கும், பழுதுகளை சரி செய்ய உதிரிபாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.5020/2012/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,30,00,000/– மாமன்றம் தமது தீர்மான எண் 106 நாள் 1.6.2012 மற்றும் வேலை உத்திரவு நாள் 25.6.2012 ன் படியும் தி/ள்.சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கப்பட்டு 26.6.2012 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பொழுது மதிப்பீட்டில் 10653 விளக்குகள் பராமரிக்கவும், தெருவிளக்கு உதிரி பாகங்கள் மாற்றியமைக்க ஆண்டொன்றிற்கு ரூ 4.00 லட்சம் செலவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சேதமடைந்த உதிரி பாகங்கள் மாற்றியமைக்க தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணி ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வார்டு பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை வகைப்படுத்தி கம்பஎண் இடப்பட்டதில் 13412 தெருவிளக்குகள் உள்ளதாக மாநகராட்சிக்கு அறிக்கை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலானவை 15 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாலும் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் பழுதடைந்த தெருவிளக்கு புதைமின் கேபிள்கள் மற்றும் உதிரிபாகங்கள் அவசர அவசியம் கருதி இம்மதிப்பீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டதாலும் கூடுதலாக 2759 தெருவிளக்குகளை பராமரிக்கப்பட்டதாலும் அனுமதிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,00,000/– ம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தெருவிளக்குகளின் அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.10,12,000/– வீதம் 21 மாதங்களுக்கு ரூ.212.52 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே இப்பணி அத்தியாவசிய பணியாதலால் ஒப்பந்த காலம் வரை பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ212.52 லட்சத்திற்கும், பழுதுகளை சரி செய்ய உதிரிபாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.5019/2012/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 25.06.2014</u>**

பொருளின் முதல் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தி.ள். சபரி எலக்ட்ரிக்ல்ஸ் என இருப்பதை தி.ள். சன்மேக் எண்டர்பிரைசஸ் என திருத்தம் செய்தும் பொருளை அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,80,00,000/– மாமன்றம் தமது தீர்மான எண் 107 நாள் 1.6.2012 மற்றும் வேலை உத்திரவு நாள் 25.6.2012 ன் படியும் தி/ள்.சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கப்பட்டு 26.6.2012 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பொழுது மதிப்பீட்டில் 8333 விளக்குகள் பராமரிக்கவும், தெருவிளக்கு உதிரி பாகங்கள் மாற்றியமைக்க ஆண்டொன்றிற்கு ரூ3.50 லட்சம் செலவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சேதமடைந்த உதிரி பாகங்கள் மாற்றியமைக்க தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணி ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வார்டு பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை வகைப்படுத்தி கம்பஎண் இடப்பட்டதில் 8977 தெருவிளக்குகள் உள்ளதாக மாநகராட்சிக்கு அறிக்கை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலானவை 15 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாலும் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் பழுதடைந்த தெருவிளக்கு புதைமின் கேபிள்கள் மற்றும் உதிரிபாகங்கள் அவசர அவசியம் கருதி இம்மதிப்பீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டதாலும் கூடுதலாக 644 தெருவிளக்குகளை பராமரிக்கப்பட்டதாலும் அனுமதிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,00,000/– ம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தெருவிளக்குகளின் அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.7,29,000/– வீதம் 15 மாதங்களுக்கு ரூ.109.35 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே இப்பணி அத்தியாவசிய பணியாதலால் ஒப்பந்த காலம் வரை பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ.109.35 லட்சத்திற்கும், பழுதுகளை சரி செய்ய உதிரிபாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.5018/2012/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 61 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,44,00,000/— மாமன்றம் தமது தீர்மான எண் 105 நாள் 1.6.2012 மற்றும் வேலை உத்திரவு நாள் 25.6.2012 ன் படியும் திரு/ள்.சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கப்பட்டு 26.6.2012 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பொழுது மதிப்பீட்டில் 9997 விளக்குகள் பராமரிக்கவும், தெருவிளக்கு உதிரி பாகங்கள் மாற்றியமைக்க ஆண்டொன்றிற்கு ரூ4.00 லட்சம் செலவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சேதமடைந்த உதிரி பாகங்கள் மாற்றியமைக்க தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பணி ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வார்டு பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை வகைப்படுத்தி கம்பஎண் இடப்பட்டதில் 10913 தெருவிளக்குகள் உள்ளதாக மாநகராட்சிக்கு அறிக்கை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலானவை 15 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாலும் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் பழுதடைந்த தெருவிளக்கு புதைமின் கேபிள்கள் மற்றும் உதிரிபாகங்கள் அவசர அவசியம் கருதி இம்மதிப்பீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டதாலும் கூடுதலாக 916 தெருவிளக்குகளை பராமரிக்கப்பட்டதாலும் அனுமதிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,44,00,000/— ம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தெருவிளக்குகளின் அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.9,05,000/— வீதம் 14 மாதங்களுக்கு ரூ.126.70 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே இப்பணி அத்தியாவசிய பணியாதலால் ஒப்பந்த காலம் வரை பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ126.70 லட்சத்திற்கும், பழுதுகளை சரி செய்ய உதிரிபாகங்கள் பொருத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.5017/2012/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 62 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட வெள்ளலூர் குப்பை கிடங்கு நுழைவாயில் அருகில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு ரூ.74,10,000 /- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.4106/14/MD5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 63 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட வெள்ளலூர் குப்பை கிடங்கு ஆர்.ஏ.எப் குடியிருப்பு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு ரூ. 74,85,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண். 4107/14/MD5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 64 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

| | |
|---|---|
| **பொருள் :** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு.ந.பத்மநாபன், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் – சட்ட அலுவலர் பதவி உயர்வு குறித்து அரசுக்கு பரிந்துரைக்க – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிப்பது – தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சி பொதுப்பிரிவில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரியும் திரு.ந.பத்மநாபன் அவர்கள் தான் எம்.ஏ.,பி.எல் படித்துள்ளதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியில் சேர்வதற்கு முன்பு 10 ஆண்டுகளாக வழக்கறிஞர் பணி செய்து வந்ததாகவும், அதனால் தனக்கு வழக்கு நடத்துவது சம்பந்தமான அனுபவம் உள்ளதாகவும் தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் அரசு செயலாளர் ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கு உதவியாக கடந்த 2 ஆண்டுகளாக வழக்கு எழுத்தராக பணி செய்து வருவதாகவும் அதனால் தனக்கு பணிவிதிகளை தளர்வு செய்து சட்ட அலுவலர் பதவி உயர்வு வழங்குமாறும் கோரியுள்ளார்.

மேலும் இம்மாநகராட்சியில் மாமன்ற செயலாளராக பணிபுரிந்து தற்பொழுது உதவி ஆணையாளராக (வருவாய்) இருக்கும் திரு.ம. சுந்தரராஜன் மற்றும் தற்பொழுது மாமன்ற செயலாளராக இருக்கும் திரு.ஆ. அமல்ராஜ் ஆகியோர்களுக்கு தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996 பாகம் III பொதுப்பணி விதிகள் விதி 3–ஐ தளர்வு செய்து பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும் அதனால் தனக்கும் மாநகராட்சியில் சட்டம் பயின்ற கண்காணிப்பாளர்கள் எவரும் இல்லாத நிலையில் தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996 பாகம் III பொதுப்பணி விதிகள், விதி 3–ஐ தளர்வு செய்து சட்ட அலுவலர் பதவி உயர்வு வழங்க கோரியுள்ளார்.

திரு.ந.பத்மநாபன் 16.04.2010 முதல் இம்மாநகராட்சியில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார். சட்ட அலுவலர் பணியிடம் பணி விதிகளின்படி வகுப்பு II பணியிடமாகும். தகுதியுள்ள கண்காணிப்பாளர் நிலையிலிருந்து சட்ட அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். திரு.ந. பத்மநாபன், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகிய இரு நிலைகளை கடந்து விதி தளர்வு செய்து, சட்ட அலுவலர் பதவி உயர்வு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 865/2013/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 65 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் தமது 28.04.2014ம் தேதிய கடிதத்தில் கோயம்புத்தூர் வனக்கோட்டம், போலாம்பட்டி வனச்சரகத்திற்குட்பட்ட சாடிவயல் பகுதியில் அமைந்துள்ள கோவைக்குற்றாலம் இயற்கை நீர்வீழ்ச்சி பகுதிக்கு தினமும் அதிக எண்ணிக்கையில் பார்வையாளர்கள் வந்து செல்கின்றனர். இதனால் இப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்க மாநகராட்சி வசம் உள்ள ஆறு நடமாடும் கழிப்பிடங்களை வழங்கிட கோரியுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு கருதி ஆறு நடமாடும் கழிப்பிடங்கள் வழங்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 178 நாள் 05.01.2011 ன்படி நடமாடும் கழிப்பிடம் ஒன்றிற்கு மொத்தம் ரூ. 34,550/- கிரேன் மூலம் தூக்கி வைத்தல், போக்குவரத்து, ப்ளம்பிங்,மேற்பார்வைக் கட்டணம், பராமரிப்பு மற்றும் வைப்புத் தொகையாக வசூலிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு கருதி அரசுதுறைக்கு வழங்கப்பட்டதால் ஆறு நடமாடும் கழிப்பிடங்களுக்கு உரிய தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து இலவசமாக வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.178/2014/எம்டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 66 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

**பொருள்** : சொத்துவரி விலக்கு மற்றும் வரிதாரர் செலுத்திய 50 சதவீத சொத்தவரித்தொகை திரும்ப செலுத்துதல் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 36- அரவிந்த் கண் மருத்துவமனை – கோவல் டிரஸ்டின் சொத்துவரி விதிப்பின் விலக்கின் மீதான சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P.No:14414/1999, 14415/1999- உச்ச நீதிமன்ற வழக்கு எண் SLP (Civil)No.CC-22178-22179 of 2013 தீர்ப்புரையின்படி கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் செலுத்திய சொத்துவரி தொகை ரூ.50,64,662.35–ஐ திரும்ப வழங்குதல் - சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை** : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 23, நாள் :09.06.2014.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் வார்டு எண் 36- காளப்பட்டி பகுதியில் அரவிந்த் கண்மருத்துவமனை இயங்கி வருகிறது. மேற்படி கண்மருத்துவமனை கட்டிடத்திற்கு 1993-94-ம் வருடம் கட்டிடம் உரிமம் காளப்பட்டி பேரூராட்சி காலத்தில் வழங்கப்பட்டது. 1996-97-ம் வருடம் அரவிந்த் கண்மருத்துவமனைக்கு வரிவிதிக்கப்படவில்லை என தணிக்கைப் பத்தி எண் 13-ல் தெரிவிக்கப்பட்டு தணிக்கைத் தடை எழுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகம் மருத்துவமனை கோவல் டிரஸ்ட் மூலம் நடத்தப்படுவதாகவும், சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி கேட்கப்பட்டது. மேற்படி கோரிக்கையை இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 76/99, நாள்:24.05.1999-ன் படி சொத்துவரி விலக்கு அளிக்க இயலாது என தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வரைபடத்தின்படி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சொத்துவரி விதிப்பினை செலுத்த மறுப்பு தெரிவித்தும் வரிவிலக்கு அளிக்கக் கோரியும் மருத்துவமனை நிர்வாகம் பேரூராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. மேற்படி வழக்கில் உயர்நீதிமன்றம் வழக்கு எண் W.P.No:14414/1999,14415/1999,WMP 20857/1999 மற்றும் 20899/1999-ல் 11.03.2003-ல் தனது உத்திரவில் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவைத் தொகையில் 50% சதவீதத்தை பேரூராட்சிக்கு செலுத்த மருத்துவமனை நிர்வாகம் வழங்க இடைக்கால தீர்ப்பு வழங்கியது.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பை எதிர்த்து டில்லி உச்ச நீதிமன்றத்தில் மருத்துவமனை நிர்வாகம் SLP Nos.18476,18477/2007 –ன் படி வழக்கு தொடர்ந்தது. உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலுவையிலுள்ள சொத்துவரி ரூ.1,01,29,324.70- ல் 50% சதவீதம் தொகை ரூ.50,64,662.35 மருத்துவமனை நிர்வாகம் பேரூராட்சிக்கு தவணை முறையில் செலுத்தியது.

ஆகவே உயர்நீதி மன்றத்தில் ஏற்கனவே நிலுவையில் இருந்த வழக்கு எண் W.P.No:14414/1999,14415/1999,WMP.20857/1999 மற்றும் 736/2008-ன் படி, சொத்துவரியிலிருந்து விலக்கு அளித்தும், மருத்துவமனை நிர்வாகம் மூலம் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்ட தொகையை மருத்துவமனைக்கு திரும்ப செலுத்தவும் சென்னை உயர்நீதிமன்றம் 23.01.2009-ம் தேதி உத்திரவிட்டது. மேற்படி தொகையை திரும்ப செலுத்த உத்திரவிட்ட தீர்ப்பாணையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற அமர்வு நீதி மன்றத்தில் வழக்கு எண் WANo: 1475/2010,1476/2010 -ன் படி பேரூராட்சியில் மேல்முறையீடு செய்து வழக்கு நடைபெற்று வந்தது. இந்நிலையில் வழக்கு எண் W.P.No:14414/1999,14415/1999 –ன் மீது 23.01.2009-ல் உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி கோவல்டிரஸ்ட் நிறுவனத்திற்கு பேரூராட்சி நிர்வாகம் தொகையை திருப்பி செலுத்தாததால் டிரஸ்ட் நிர்வாகம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் CP.No. 712/2010- ன் படி வழக்கு தொடர்ந்தது.

மேற்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை எதிர்த்து WA No: 1475/2010, 1476/2010–ன் படி பேரூராட்சி நிர்வாகம் வழக்கினை நடத்தியது. மேற்படி வழக்கில் 11.08.2010-ல் சென்னை உயர்நீதிமன்ற அமர்வு நீதிமன்றத்தில் அரவிந்த் கண் மருத்துவமனையிலிருந்து பேரூராட்சிக்கு தவணை முறையில் செலுத்தப்பட்ட தொகையை திருப்பி செலுத்தும் நீதிமன்ற ஆணைக்கு 11.08.2010-ல் தடையாணை பெறப்பட்டது. இத்தடையாணையினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 14.06.2013 அன்று தள்ளுபடி செய்து தீர்ப்பினை வழங்கியது, இந்நிலையில் இதனை எதிர்த்து மாநகராட்சி உச்சநீதி மன்றத்தில் வழக்கு எண் SLP (Civil)No.CC-22178-22179 of 2013-ன் படி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கினை உச்சநீதி மன்றம் 13.01.2014-ம் தேதியில் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேற்படி வழக்கு தொடர்பாக ஆணையாளர் அவர்களின் 23.02.2014-ம் தேதிய உத்திரவின்படி உச்சநீதி மன்ற வழக்கறிஞர் திரு. மணீஷ் பிட்லே அவர்களிடம் மறுபரிசீலனை மனு (Review petition) தாக்கல் செய்வதற்கு கருத்துரு கோரப்பட்டது.

உச்சநீதி மன்ற வழக்கறிஞர் திரு. மணீஷ் பிட்லே அவர்கள் தனது 15.03.2014-ம் தேதிய தனது கடிதத்தில் இவ்வழக்கின் மீது மறுபரிசீலனை (Review Petition) மனு தாக்கல் செய்யப்பட்டால் இந்த மறுபரிசீலனை மனு அனைத்து உச்ச நீதி மன்ற நீதிபதிகளுக்கும் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், மேலும் இந்த மறுபரிசீலனை மனு மீது நீதிமன்றத்தினில் விசாரணை ஏதும் இருக்காது எனவும், மாநகராட்சி வாதத்தினை எடுத்துரைக்க வாய்ப்புகள் குறைவு எனவும், **"எனவே மனு தாக்கல் செய்தால் மாநகராட்சிக்கு சாதகமான தீர்ப்பு வருவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை எனவும் கருத்து தெரிவித்துள்ளார்.மேலும் உயர்நீதி மன்ற தீர்ப்பினை மாநகராட்சி அமுல்படுத்த வேண்டும் "எனவும் கூறியுள்ளார்.**

இந்நிலையில் மீண்டும் கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் தங்களால் செலுத்தப்பட்ட சொத்துவரி நிலுவையினை திரும்பக் கோரியும் , சொத்துவரி விதிக்கப்பட்டதற்கு விலக்கு அளிக்கக் கோரியும் 04.04.2014-ல் கோரிக்கை அளித்துள்ளனர்.

எனவே மாண்பமை உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்ற தீர்ப்பின்படி கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் செலுத்திய சொத்துவரி நிலுவைத்தொகை ரூ.50,64,662.35/-ஐ திருப்பி கொடுக்கவும், மேற்படி நிறுவனத்தினருக்கு சொத்துவரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வரிவிதிப்பு மற்றும் மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 24, நாள் 09.06.2014-ல் மாமன்றத்தின் முடிவிற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை முடிவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 8805 /2013/கி சி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 67 நாள் 25.06.2014**

உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - வாகனங்கள் - அலுவலர்கள் பயன்பாட்டிலுள்ள பழைய வாகனங்களுக்கு மாற்றாக புதியவைகள் வாங்கிய பின் கழிவு செய்வது – தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.2275 உள்துறை (போக்குவரத்து – I) நாள் 10.01.1990.
2. அரசாணை (நிலை) எண்.983 உள்துறை(போக்குவரத்து – IV) நாள் 03.08.2004.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் அலுவலர்களின் அலுவல் பணிகளுக்காக பயன்பாட்டிலுள்ள கீழ்கண்ட இலகுரக மோட்டார் வாகனங்களில் பெரும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் வாகனங்கள் அடிக்கடி நின்று போய்விடுகிறது. இதனால் அலுவலக பணிகள் மிகவும் பாதிப்படைகிறது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண். | வாகன பதிவு எண் | வாகனம் வாங்கப்பட்ட நாள் | வாகனத்தின் மாடல் | வாகனம் ஓடியுள்ள தூரம் (கி.மீ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | TN37-P8821 | 18.06.1997 | மஹேந்திரா கமான்டர் ஜீப் (டீசல்) | 3.25 |
| 2. | TN37-P8822 | 18.06.1997 | மஹேந்திரா கமான்டர் ஜீப் (டீசல்) | 3.50 |
| 3. | TN37-P8823 | 18.06.1997 | மஹேந்திரா கமான்டர் ஜீப் (டீசல்) | 3.28 |
| 4. | TN37-P8824 | 18.06.1997 | மஹேந்திரா கமான்டர் ஜீப் (டீசல்) | 3.26 |

பார்வையில் 1-ல் கண்ட அரசாணையின் படி 10 ஆண்டு வயதிற்கு மேற்பட்ட வாகனங்களில் ஏற்படும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினத்தொகை ஆண்டொன்றிற்கு டீசல் வாகனத்திற்கு ரூ.12,000/- என உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலே குறிக்கப்பட்டுள்ள வாகனங்களில் TN37-P8821-ல் ஏற்பட்டுள்ள பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினத்தொகை உத்தேசமாக ரூ.1,40,000/- ஆகுமென அதன் தயாரிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இது அரசு நிர்ணயித்த உச்ச வரம்பினை காட்டிலும் மிகவும் கூடுதல் செலவினமாக அமையும்.

பார்வையில் 2-ல் கண்ட அரசாணையின் படி டீசல் இயக்கூர்திகளின் வயது 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தாலோ அல்லது 2.5 லட்சம் கி.மீ.தூரம் ஓடியிருந்தாலோ இதில் எது பின் தேதியில் அமைகிறதோ அந்த தேதியில் மேற்படி வாகனத்தினை கழிவு செய்யலாம்.

மேலே குறிக்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் அனைத்தினையும் பூர்த்தி செய்வதால் அவற்றிற்கு பதில் 4 எண்ணிக்கைகளிலான புதிய மஹேந்திரா பொலிரோ ஜீப் (டீசல்)களை ரூ.36.00 லட்சம் செலவினத்தில் DGS & D அங்கீகரித்த விலையிலோ அல்லது அரசு சிறப்பு விலையில் வாங்கிக் கொள்ளவும், பின்னர் பழைய வாகனங்களை கழிவு செய்ய இயக்குநர், மோட்டார் வாகனப்பராமரிப்பு துறை, சென்னை அவர்களின் ஆணையினை பெற்று கழிவு செய்து கொள்ளவும், பழைய வாகனங்களை கழிவு செய்த பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற பிரேரணை அனுப்புவற்கு ஒப்புதல் வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 9189 / 14 / எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 68 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பாலக்காடு பிரதான சாலையில் உள்ள உக்கடம் பெரிய குளத்தை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் **14.06.2014** அன்று மாவட்ட ஆட்சித்தலைவர், வணக்கத்திற்குரிய மேயர் (பொ), மாநகராட்சி ஆணையாளர், மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர், பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் ஆகியோருடன் களஆய்வு மேற்கொண்ட பொழுது உக்கடம் பகுதியிலிருந்து ஆத்துபாலம் செல்லும் சாலையில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலை குறைக்க பெரிய குளம் கரையில் இருசக்கர வாகனங்கள் செல்லும் வகையில் சாலை மற்றும் நடைபாதை அமைக்க உத்திரவிட்டுள்ளார்.

உக்கடம் முதல் கரும்புக்கடை வரையிலான **1.4** கி.மீ நீளம் உள்ள பெரிய குளம் குளக்கரையினை பலப்படுத்தி, தடுப்பு சுவர் அமைத்து கரையின் ஓரத்தில் கம்பி வலை தடுப்பு வேலி, புல்வெளியுடன் கூடிய நடைபாதை, இருச்சக்கர வாகனங்கள் செல்லத்தக்க வகையில் சாலை அமைக்கும் பணிக்கு தேவையான சுமார் **4.95** கோடி நிதியினை அரசு மானியம் மூலமாகவோ அல்லது **2014–15–**ம் நிதியாண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று இப்பணியை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும், முதன்மைப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **4437/2014/எம்.டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 69 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

| | |
|---|---|
| பொருள் : | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 3க்கு உட்பட்ட சுப்பிரமணியன்பாளையம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள ரேசன் கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக |
| பார்வை : | உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 23.06.2014 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 03ல் சுப்பிரமணியம்பாளையம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதிதாக 324 ச.அடி அளவில் புதிதாக ரேசன் கடை கட்டப்பட்டுள்ளது. இக்கடைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2000 /- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வையில் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மாத வாடகை அடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ள கடையினை ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 42 நாள் 23.06.2014 ல் மேற்படி ரேசன் கடைக்கு ரூ. 2000/- மாதவாடகை அடிப்படையில் கடையினை ஒதுக்கீடு செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 70 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் -100வது வார்டுக்குட்பட்ட பகுதியில் கார்மல் நகர் வீதியில் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் புதியதாக கட்டப்பட்ட நியாயவிலை கடை - வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

பார்வை
1. தலைவர் குனியமுத்தூர் கோ-ஆப்ரேட்டிவ் ஸ்டோர் லிமிடெட் அவர்களின் கடித நாள்.25.02.2014.
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 13.06.2014.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 36 நாள்.23.06.2014

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 100-வது வார்டில் கார்மல் நகர் பகுதியில் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்ட நியாயவிலை கடையை குனியமுத்தூர் கோ-ஆப்ரேட்டிவ் ஸ்டோர் மூலம் நியாயவிலை கடை நடத்திக் கொள்ளவும் இக்கடைக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மாத வாடகை ரூ. 5050/- என உதவிப்பொறியாளர் அறிக்கை சமர்பித்துள்ளார்.

மேற்படி நியாய விலைக் கடைக்கு வாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 36 நாள்.23.06.2014 ன் படி மாத வாடகை ரூ.2500/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 11141/2012/ அ1(தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 71 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் -100- வது வார்டு மேட்டூர் ஆடிட்டர் வீதியில் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் புதியதாக கட்டப்பட்ட வாடகை நிர்ணயம் செய்வது - தொடர்பாக.

பார்வை
1. கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் எண். கே. 1948 அவர்களின் கடித நாள். 23.05.2014.
2. துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு உத்திரவு நாள். 19.06.2014.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 37 நாள்.23.06.2014

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 2014-2015 ஆண்டிற்கு வார்டு எண். 100-ல் மேட்டூர் பகுதியில் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடையை கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் எண். கே. 1948 மூலம் நியாய விலை கடை நடத்திக் கொள்ளவும் 807 சதுரடி கொண்ட கடைக்கு பொது பணித்துறை மதிப்பீட்டின் படி மாத வாடகை ரூ. 5269/- என உதவிப் பொறியாளர் அறிக்கை சமர்பித்துள்ளார். மேற்படி நியாய விலை கடைக்கு வாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 37 நாள்.23.06.2014 ன் படி மாத வாடகை ரூ.2500/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 9105/2014/ அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 72 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

பொருள் : வருவாய் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.17, மருதமலை அடிவாரம் புதிய கடைகள் - பொதுமின்ஏலம் விடுதல் - மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

பார்வை : இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள்.18.06.2014.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.17, மருதமலை அடிவாரம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக வணிக வளாகம் கட்டிடத்தில் வடக்கு பார்த்து மொத்தம் 10 கடைகள் கட்டப்பட்டது. அதில் 1 - 9 கடைகள் 10 x 16 = 160 சதுரடி உள்ளது, 10-வது கடை 8 x 16 = 128 சதுரடியில் கட்டப்பட்டது, இதை தொடர்ந்து கிழக்கு பார்த்து 5 கடைகள் உள்ளன. அதில் 8 x 10 = 80 உள்ளது என பார்வையில் காணும் இளம் பொறியாளர் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி இடத்திற்கு பொதுப்பணித்துறையின் ஒரு சதுரடி மதிப்பு ரூ. 40.94 ஆகும்.

| வரிசை எண். | கடை எண் | கடை அளவு | சதுரடிக்கு | கடை ஒன்றுக்கு |
|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் வடக்கு பகுதி = 1-9 கடைகள் | 10 x 16 = 160 | 40.94 | 6550 |
| 2. | மருதமலை அடிவாரம் வடக்கு பகுதி கடை எண்.10 | 8 x 16 = 128 | 40.94 | 5240 |
| 3. | மருதமலை அடிவாரம் கிழக்கு பகுதி கடை எண்.1-5 | 8 x 10 = 80 | 40.94 | 3275 |

| கடையின் அளவு சதுரடியில் | வைப்புத்தொகை | காப்புத்தொகை | வங்கி உறுதி சான்றிதழ் (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| கடை எண்.1 முதல் 10 வரை ( 180 & 128) | 75000/- | 50000/- | 200000/- | 50000/- |
| கடை எண்.1 முதல் 5 வரை (80) | 50000/- | 50000/- | 200000/- | 50000/- |

எனவே மேற்படி இனத்தை பொதுஏலம் விட ஆணையாளர் அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.27 நாள்23.06.2014-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 4187/2014/A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 73 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வணிகவளாக கடைகள் 2014-17-க்கான - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மாமன்றத்திற்கு பொருள் வைப்பது தொடர்பாக.

பார்வை: பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.18.06.2014

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2014-17 வணிகவளாகங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 18.06.2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு,

ஏலம் நடைபெற்ற தேதி – 18.06.2014

வணிகவளாக கடைகள்

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணய தொகை | ஏலதாரர் பெயர் | 7-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (10 x 16 =160 சதுரடி | | | | | |
| | கடை எண்.31 | 11500 | நிக்கீட் லக்கர்<br>A.R.ஷாநவாஸ்<br>B.J.பிரகாஷ் | -<br>-<br>12000 | 15700<br>13500<br>11100 | 15700 |
| | கடை எண்.34 | 9250 | R.முகமது பாரூக் & பார்ட்னர்<br>V.மோகன்ராஜ் | 10050 | 13050<br>10500 | 13050 |

| 2. | வார்டு எண்.23 D.B.சாலையில் முதல் தளத்தில் உள்ள 13’9 x 10’ சதுரடியுள்ள கடை எண்.12 | அரசு நிர்ணய தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| | கடை எண்.12 | 7587 | P.B.சஜுவன்<br>லட்சுமி நாராயணன் | -<br>- | 10500<br>9000 | 10500 |

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 18.06.2014-ம் தேதி நடைபெற்ற 7-வது ஏலத்தில் கடை எண்.31-ற்கு அரசு மதிப்பு ரூ.10500/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15700/-ற்கு திரு.நிக்கிட்லக்கர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 1-ல் உள்ள இனத்திற்கு 18.06.2014-ம் தேதி நடைபெற்ற 7-வது ஏலத்தில் கடை எண்.34-ற்கு அரசு மதிப்பு ரூ.9250/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.13050/-ற்கு திரு.R.முகம்மது பாரூக் & பார்ட்னர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு 18.06.2014-ம் தேதி நடைபெற்ற 1-வது ஏலத்தில் கடை எண்.12-ற்கு அரசு மதிப்பு ரூ.7587/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10500/-ற்கு திரு.P.B.சஜுவன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய இனத்தை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.28 நாள்23.06.2014-ன்படி உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374/2013/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 74 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிம புதுப்பித்தல் - மாமன்றத்திற்கு பொருள் வைப்பது -தொடர்பாக

பார்வை : அரசாணை (நிலை) எண். 92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007

*********

பார்வை 1-ல் காணும் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007-ன்படி 01.04.2014 முதல் 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிட்டுள்ளது.

3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்

1. கிருஷ்ணசாமி ரோடு வடக்கு (வார்டு எண். 22)

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஒதுக்கீடு/ உரிமம் புதுப்பித்தல் செய்யப்பட்ட நாள் | உரிமகாலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள்.03.07.07-ன்படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2220023 | 6 | எம்.மகுடபதி | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 2650/- | 3048/- |
| 2 | 2220024 | 7 | எம்.மகுடபதி | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 2700/- | 3105/- |

2.மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்கெட் 16 ½ x11= 182 ச.அடி (வார்டு எண். 10)

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஒதுக்கீடு/ உரிமம் புதுப்பித்தல் செய்யப்பட்ட நாள் | உரிமகாலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள்.03.07.07-ன்படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1020325 | 1 | ஐவர்ஆறுமுகம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 5250/- | 6038/- |
| 4 | 1020328 | 4 | ஐவர்ஆறுமுகம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 5250/- | 6038/- |
| 5 | 1020329 | 5 | ஐவர்ஆறுமுகம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 5250/- | 6038/- |
| 6 | 1020349 | 25 | ஐவர்ஆறுமுகம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 5250/- | 6038/- |

மேற்படி இனத்திற்கு பெயர்மாற்றம் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு நிலுவையில் உள்ளது.

3.மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலைய கடைகள் (வார்டு எண். 10)

| வ. எண் | வ.வி.எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஒதுக்கீடு/ உரிமம் புதுப்பித்தல் செய்யப்பட்ட நாள் | உரிமகாலம் முடியும் நாள் | உரிம ம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள்.03.07.07-ன்படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1020598 | 2 | A.N.பேக்ஸ் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 27000/- | 31050/- |
| 8 | 1020599 | 3 | M. செல்வம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 22500/- | 25875/- |
| 9 | 1020600 | 6 | S.கௌசல்யா | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 142000/- | 163300/- |
| 10 | 1020601 | 1 | KSRTC REC Counter | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 7310/- | 8407/- |
| 11 | 1020602 | 2 | KSRTC REC Counter | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 1938/- | 2229/- |
| 12 | 1020603 | 3 | Tamilnadu State Transport Corporation | 01.02.2011 | 31.01.2014 | 01.02.2014 | 5990/- | 6290/- |

4.பன்னீர்செல்வம் பூமார்கெட் மேடை கடைகள் (வார்டு எண். 24)

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஒதுக்கீடு/ உரிமம் புதுப்பித்தல் செய்யப்பட்ட நாள் | உரிமகாலம் முடியும் நாள் | உரிம ம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | தற்போது உள்ள மாதவாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள்.03.07.07-ன்படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 2420370 | A1 | செல்லம்மாள் | 08.11.2008<br>08.11.2011 | 07.11.2011<br>08.11..2014 | 01.04.2011 | 18098/- | 20813/- |
| 14 | 2420378 | B9 | N.ரவி | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 21444/- | 24668/- |
| 15 | 2420432 | F63 | N.ரவிசந்திரன் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 1521/- | 1749/- |
| 16 | 2420478 | I-109 | N.ரவிச்சந்திரன் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 2433/- | 2798/- |
| 17 | 2420511 | J-142 | H.ஜாபர் அலி | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 4302/- | 4947/- |
| 18 | 2420479 | I-110 | D.சீனிவாசன் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 6388/- | 7361/- |

5.ரங்கேகவுடர் வீதி நவீன மலர் அங்காடி (வார்டு எண். 24)

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஒதுக்கீடு/ உரிமம் புதுப்பித்தல் செய்யப் பட்ட நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள்.03.07.07-ன்படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | 2420552 | 2 | A.R.முகமது யூனிஸ் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 7500/- | 8625/- |
| 20 | 2420559 | 9 | H.ஜாபர் அலி | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 8000/- | 9200/- |
| 21 | 2420560 | 10 | M.உஸ்மான் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 6000/- | 6900/- |
| 22 | 2420566 | 16 | K.கார்த்திகேயன் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 7500/- | 8625/- |
| 23 | 2420574 | 24 | S.ஷாஜகான் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 4000/- | 4600/- |
| 24 | 2420575 | 25 | K.கார்த்திகேயன் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3750/- | 4313/- |
| 25 | 2420583 | 33 | A.M.அன்சாரி | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 4000/- | 4600/- |
| 26 | 2420584 | 34 | A.M.முஸ்தபா | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3750/- | 4313/- |
| 27 | 2420585 | 35 | M.மாணிக்கம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3500/- | 4025/- |
| 28 | 2420586 | 36 | M.முகமது சலீப் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3750/- | 4313/- |
| 29 | 2420588 | 38 | M.காதர்பாட்ஷா | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3550/- | 4083/- |
| 30 | 2420589 | 39 | A.பரமசிவம் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3600/- | 4140/- |
| 31 | 2420593 | 43 | P.பாலு | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3150/- | 3623/- |
| 32 | 2420594 | 44 | S.காஜாஉஷேன் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3100/- | 3565/- |
| 33 | 2420590 | 40 | A.N.சக்திவேல் | 01.04.2011 | 31.03.2014 | 01.04.2014 | 3100/- | 3565/- |

மேற்படி கடைகளுக்கு பார்வையில் காணும் அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகை 15% வாடகை உயர்வு செய்து மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்கப்படவேண்டும்

வரிசை எண்.13-ல் உள்ள இனத்திற்கு (கடை எண். A1-ற்கு) உரிமம் 08.11.2005-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 08.11.2008 முதல் 15% உயர்வு செய்யப்பட்டுள்ளது. 08.11.2011 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய 15% உயர்வு நாளதுவரை செய்யப்படவில்லை. இதற்கிடையே மனுதாரர் சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என்றும் நிலுவைத்தொகையினை செலுத்த கால அவகாசம் கோரியும் W.P.No.5394/2013 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் மீதான 09.04.2013ம் தேதிய இடைக்கால உத்தரவில் நிலுவைத் தொகையில் ரூபாய் மூன்று லட்சம் செலுத்த வேண்டுமென உத்திரவிடப்பட்டு செலுத்தப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளது.

அரசாணை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் உரிமதாரர் வெளிமார்கெட் மதிப்பு அல்லது 15% உயர்வு இவற்றில் எது அதிகமோ அத்தொகையினை செலுத்தி உரிமம் புதுப்புத்துக்கொள்ள முன்னுரிமை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரையிலான உயர்வு செய்யப்படும் வாடகையினை நிலுவையின்றி செலுத்தி உரிமம் புதுப்பிக்க கோரும் நேர்வில் உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக பரிசீலனை செய்யலாம்.

இதர இனங்களுக்கு அரசாணை(நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரர்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் மேற்படி உரிமதாரர்களிடமிருந்து நாளது தேதிவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. எனவே மேற்படி உரிமதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி உரிமம் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் உயர்வு செய்யப்படும் வாடகை செலுத்தக்கோரி கடிதம் அனுப்பலாம். கட்டணம் செலுத்த 31.7.2014 வரை கால அவகாசம் வழங்கலாம்.

மேற்படி உரிமம்தாரர்கள் செலுத்தியுள்ள வாடகை வைப்புத் தொகையினை சரிபார்த்து உயர்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத்தொகையினை வாடகை முன்பணமாக உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். இதற்கான வித்தியாசத்தொகையினை உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கவும், உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம்புதுப்பிக்காத நேர்விலும், உயர்வு செய்யப்பட்ட வாடகை செலுத்த சம்மதிக்காத நேர்விலும் அவர்களின் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புப்பட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் நடத்தலாம்.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.39 நாள்23.06.2014-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1476/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 75 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.71 காமராஜ் சாலையிலுள்ள கடை எண்.1 மற்றும் 2-க்கு – 18.06.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் கோரிய உயர்ந்தபட்ச ஏலக்கோரிகையை ஏற்று ஒதுக்கீடு செய்ய அனுமதி கோருதல் தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.30 நாள்.23.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 18.06.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 05.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 18.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயா |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.71 காமராஜ் சாலையிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1(88 சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.6,700/- | ரூ.6700/- திருமதி.S.ரேணுகாதேவி (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.7209/- திருமதி.V.அனிதா (ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | வார்டு எண்.71 காமராஜ் சாலையிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண்.2 (88 சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.6,700/- | ரூ.6700/- திரு.M..டேவிட் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.7209/- திருமதி.V.அனிதா (ஒப்பந்தப்புள்ளி |

மேற்குறிப்பிட்ட (உ) இனத்திற்கு 18.06.2014 அன்று மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.1 மற்றும் கடை எண். 2க்கு திருமதி.V.அனிதா அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினங்களை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.30 நாள்.23.06.2014 –ல் உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 76 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்ய அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.35 நாள்.23.06.2014

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகளில் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுபணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யவும் மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

- ❖ வார்டு எண்.84 உக்கடம் புதிய மீன்மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 68 கடைகள்.

மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து மற்றும் நிலுவை வித்தியாச வாடகையினை வசூல் செய்யப்படவேண்டும்.

அரசாணை(நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரர்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் மேற்படி உரிமதாரர்களிடமிருந்து நாளது தேதிவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. எனவே மேற்படி உரிமதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி உரிமம் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் உயர்வு செய்யப்படும் வாடகை செலுத்தக்கோரி கடிதம் அனுப்பலாம். கட்டணம் செலுத்த 31.7.2014 வரை கால அவகாசம் வழங்கலாம்.

மேற்படி உரிமம்தாரர்கள் செலுத்தியுள்ள முன் வைப்பு வாடகை தொகையினை சரி பார்த்து உயர்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத்தொகையினை/ வித்தியாச தொகையினை உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கவும். சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம்புதுப்பிக்காத நேர்விலும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டு வரவும் அவர்களின் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புபட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் நடத்தவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.35 நாள்.23.06.2014 –ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 77 நாள் 25.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் உக்கடம் பேருந்துநிலையம் தமிழ் புத்தக கடைகளுக்கு உரிமம் புதுப்பித்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதி வேண்டுவது – தொடர்பாக. |
| பார்வை : | 1.அரசாணை(நிலை)எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.<br>2.மாமன்ற தீர்மான எண்.186 நாள்.16.8.212.<br>3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.32 நாள்.23.06.2014. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், உக்கடம் பேருந்துநிலையம் கடைகளில் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைகிறது. மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள் ) எண். 147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.186 நாள். 16.8.2012 படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம் : காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்

| வ. எண் | பெயர் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டிய காலம் | மாத வாடகை ரூபாய் | 15% உயர்வு செய்த மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1 | விஜயா பதிப்பகம் | 01.04.2014 | 01.04.2014 முதல் 31.03.2017 வரை | 230/- | 265/- |
| 2. | நியூ செஞ்சுரி புத்தக நிலையம் | 01.04.2014 | 01.04.2014 முதல் 31.03.2017 வரை | 230/- | 265/- |

இடம் : உக்கடம் பேருந்து நிலையம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கீதா பப்ளிகேஷன்ஸ் | 01.04.2014 | 01.04.2014 முதல் 31.03.2017 வரை | 230/- | 265/- |

மேற்கண்ட கடைகளுக்கு 01.04.2014 முதல் மூன்றாண்டுகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும் அத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.32 நாள்.23.06.2014 –ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.7403 /2012 /அ9 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 78 நாள் 25.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

| | |
|---|---|
| பொருள்:- | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.68 சூரியன் வீதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்தை பொதுமக்கள் உபயோகப்படுத்தும் வகையில் வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது- தொடர்பாக. |
| பார்வை:- | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.34 நாள் .23.06.2014. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.68 சூரியன் வீதியில்) உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 1818.44 சதுரடி பரப்பளவுள்ள சமுதாய கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி சமுதாய கூடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பாக ஒரு சதுர அடிக்கு ரூ.53/- வீதம் 1818.44 சதுரடிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.3,160/-(வருட வாடகை ரூ.11,53,213/-)என உதவி பொறியாளர் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சமுதாய கூடத்தை பொது மக்களின் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்ய நாள் ஒன்றிற்கு வாடகை ரூ.3,160/- மற்றும் வைப்பு தொகை ரூ.5,000/-ம் என நிர்ணயம் செய்யவும் மத்திய மாநில அரசு துறைகளான வருமானவரித்துறை, கலால்வரித்துறை மற்றும் இதர துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின் படி சேவை வரி, இதர வரி கட்டணம் மற்றும் மின்சார செலவினங்கள் செலுத்த பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் சமுதாய கூடத்தை ஒதுக்கீடு செய்வது குறித்தும் முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.34 நாள்.23.06.2014-ல் தினசரி வாடகை ரூ.2,000/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.5021/2014/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 79 நாள் 25.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்ய அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.33 நாள்.23.06.2014

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகளில் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுபணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யவும் மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

1) வார்டு எண்.54 மத்திய பேருந்து நிலையம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் -5 கடைகள்.

2) வார்டு எண்.52 டாக்டர் இராதகிருஷ்ண ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 6கடைகள்.

3) வார்டு எண்.51 பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 2 கடைகள்.

மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து நிலுவை வித்தியாச வாடகையினை வசூல் செய்யப்படவேண்டும்.

அரசாணை(நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரர்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் மேற்படி உரிமதாரர்களிடமிருந்து நாளது தேதிவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. எனவே மேற்படி உரிமதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி உரிமம் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் உயர்வு செய்யப்படும் வாடகை செலுத்தக்கோரி கடிதம் அனுப்பலாம். கட்டணம் செலுத்த 31.7.2014 வரை கால அவகாசம் வழங்கலாம்.

மேற்படி உரிமம்தாரர்கள் செலுத்தியுள்ள முன் வைப்பு வாடகை தொகையினை சரி பார்த்து உயர்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத்தொகையினை/ வித்தியாச தொகையினை உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கவும். சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பிக்காத நேர்விலும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அவர்களின் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புபட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் நடத்தவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.33 நாள்.23.06.2014 –ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 80 நாள் 25.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.54- நஞ்சப்பா ரோடு நடைபாதை கடைகளுக்கு கணினியில் உள்ள பழைய கேட்புகளை நீக்கம் செய்தல் மற்றும் நெடுஞ்சாலை துறையின் விரிவாக்க பணிகளுக்காக மேற்படி இடத்திலுள்ள கடைகளை அப்புறப்படுத்த கோருதல் - தொடபாக

பார்வை 1.உதவி கோட்டப்பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.2/213-141 இவசு நாள் 07.3.2014.
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.41 நாள்.23.06.2014.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.54- நஞ்சப்பா ரோடு ஓரத்திலுள்ள 125 நடைபாதை கடைகள் 08.8.1999-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாமன்ற தீர்மான எண்.117 நாள். 30.07.2003–ன் மூலம் ரூ25/- வாடகையினை ரூ.15/- ஆக 08.08.1999 முதல் அரசு அனுமதி பெற்று குறைக்கவும் தின வாடகை ரூ.15/- அடிப்படையில் நிலுவையினை முதற்கட்டமாக வசூலித்து 01.10.2003 முதல் 31.03.2006 வரை உரிமம் காலம் மறு நீட்டிப்பு செய்து தரவும் குறைக்கப்பட்ட தொகை ரூ10/- அடிப்படையில் 08.08.1999 முதல் ஏற்கனவே எழுப்பப்பட்ட கேட்பினை அரசுக்கு கருத்துரு அனுப்பி உத்திரவு பெற்று நீக்கம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

கீழ் கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கடை உரிமதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடையின் தின வாடகை ரூ.15/- ஆகும் (மாமன்ற தீர்மான எண்.117 நாள்.3.07.2003-ன் மீது அரசு எடுக்கும் முடிவிற்குட்பட்டது.)
2) தின வாடகையை உடனுக்குடன் செலுத்திவிட வேண்டும்.
3) 10-ம் தேதிக்கு மேல் செலுத்தும் வாடகை தொகைக்கு 18 சதவீதம் வட்டி வசூலிக்கப்படும்.
4) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடையை தாங்களே நடத்தவேண்டும் உள்வாடகைக்கு விடக்கூடாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.
5) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 x 4 அளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.
6) கடை எவ்வித வியாபாரத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த வியாபாரம் மட்டுமே செய்யப்படவேண்டும். மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்
7) இந்த ஒப்பந்த நீட்டிப்பு 01.10.2003 முதல் 31.3.2006 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு ஆகும்.
8) கடையின் உரிமத்தொகையை மாநகராட்சி கருவூலத்திலேயோ அல்லது மாநகராட்சியின் மூலம் நியமிக்கப்படும் பணியாளரிடம் மட்டுமே செலுத்தப்படவேண்டும்.
9) வாடகை செலுத்திய ரசீதை கடையிலேயே பத்திரமாக வைத்திருக்க வேண்டும். மாநகராட்சி அலுவலர்கள் கடை வாடகை குறித்து ஆய்வு செய்கையில் ரசீதை காண்பிக்கவேண்டும்.
10) மாநகராட்சிக்கு தங்களது கடை அமைந்துள்ள இடம் தேவைப்படும்பட்சத்தில் உடனடியாக கடையை காலி செய்து மாநகராட்சி வசம் ஒப்படைசெய்யவேண்டும்
11) இவ் ஒதுக்கீடானது மாநகராட்சி பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும் .

மேற்படி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என ரூ.20/- முத்திரைத்தாளில் குறிப்பிட்டு ஒப்பந்தப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

மேலும் கடை உரிமதாரா்கள் இதுநாள் வரை தின வாடகை ரூ.15-யை தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிம எண்களில் செலுத்தாமல் வட்டியில்லாமல் கணக்கு தலைப்பு எண். 3017 மற்றும் 3018 (பல்வகை கேட்பு) செலுத்திவருகிறாா்கள்.

எனவே பாா்வையில் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி நெடுஞ்சாலை துறையின் விரிவாக்க பணிகளுக்காக மேற்படி இடத்திலுள்ள கடைகளின் உரிமங்களை ரத்து செய்து கடைகளை அப்புறப்படுத்த அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீா்மான எண்.41 நாள்.23.06.2014 –ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.1223 /2013 /அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 81 நாள் 25.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலம் வாா்டு எண்.51 – காந்திபுரம் 8-நம்பா் சீனிவாசபுரம் தினசரி காய்கறி மற்றும் மாமிச அங்காடியில் வாடகை உயா்வு செய்து மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை 15 சதவீதம் உயா்வு செய்ய அனுமதி வேண்டுதல் - தொடா்பாக.

பாா்வை 1.அரசாணை எண்.147 ந.தி.ம.கு.வ(நிதி4) துறை நாள்.30.12.2000
2.அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ. துறை நாள்.03.07.2007.
3. மாமன்ற தீா்மான எண்.250 நாள் 18.02.2011
4.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.31. நாள்.23.06.2014.

------

பாா்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகா்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிா்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீா்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிா்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயா்வு செய்து மாத வாடகை நிா்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிா்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாா்வை 3-ல் காணும் மாமன்ற தீா்மானத்தின்படி தினசரி வாடகை ரூ.25-யை மாத வாடகையாக உரிம எண்களில் கணினியில் கேட்பு பதிவு செய்யப்பட்டு வாடகை வசூல் செய்யப்படுகிறது. தற்போது மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள 120 கடைகளுக்கு 01.04.2014 முதல் மூன்றாண்டுகளுக்கு 15 சதவீதம் வாடகை உயா்வு செய்யமேலும் உயா்வு செய்யப்பட்ட வாடகையினை நிா்ணயம் செய்து மற்றும் நிலுவை வித்தியாச வாடகையினை வசூல் செய்யப்படவேண்டும்.

அரசாணை(நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரா்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னா் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் மேற்படி உரிமதாரா்களிடமிருந்து நாளது தேதிவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. எனவே மேற்படி உரிமதாரா்களுக்கு அறிவிப்பு வழங்கி உரிமம் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் உயா்வு செய்யப்படும் வாடகை செலுத்தக்கோரி கடிதம் அனுப்பலாம். கட்டணம் செலுத்த 31.7.2014 வரை கால அவகாசம் வழங்கலாம்.

மேற்படி உரிமதாரா்கள் செலுத்தியுள்ள முன்வைப்பு வாடகைத் தொகையினை சரிபாா்த்து உயா்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத்தொகையினை/ வித்தியாசத் தொகையினை உரிமதாரா்களிடமிருந்து வசூலிக்கவும், சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரா்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பிக்காத நோ்விலும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரா்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டு வரவும் அவா்களின் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புபட்டியலில் சோ்த்து இவ்வினங்களுக்கு மறுஏலம் நடத்தவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீா்மான எண்.31 நாள்.23.06.2014 –ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.8979 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 82 நாள் 25.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.25 கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட் சாலை) கடை எண்.1,2,3 மற்றும் 4-க்கு – 18.06.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் கோரிய உயர்ந்தபட்ச ஏலக்கோரிகையை ஏற்று ஒதுக்கீடு செய்ய அனுமதி கோருதல் தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 29 நாள்.23.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 18.06.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 05.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 18.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயா |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண். 1 (186சதுரடி ) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.14,000/- | ரூ.14,000/- திருமதி.ஜோஷபின் மேரி (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.16,000/- திரு.விஷால் கோத்தரி (ஒப்பந்தப்புள்ளி) |
| 2. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண். 2 (186சதுரடி ) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.13,950/- | ரூ.13,950/- திருமதி.ஜோஷபின் மேரி (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.14,500/- திருமதி.ஜோஷபின் மேரி (மின்ஏலம்) |
| 3. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண். 3 (186சதுரடி ) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.13,900/- | ரூ.13,900/- திரு.சேவியர்வசந் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.14,250/- திரு.சேவியர்வசந் (மின்ஏலம்) |
| 4. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண்.4 (186சதுரடி ) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.13,578/- | - | ரூ.18,500/- திரு.எம்.அனிஷ் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு ஐந்து முறை ஏலம் நடைபெற்றது. வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள கடைகளுக்கு 18.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பீட்டை காட்டிலும் கூடுதலாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினங்களை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 29 நாள்.23.06.2014 –ல் வரிசை எண்.2 மற்றும் 3 ஆகிய கடைகள் கூடுதல் தொகைக்கு ஏலம் போக வாய்ப்புள்ளதால், மறு ஏலம் கோரவும், பிற இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படைசெய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/2013/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 83 நாள் 25.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

**பொருள்** : குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம்- சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து நேரம் காப்பாளர் அறைகள் - உரிம காலம் 01.04.2014 முதல் 31.03.2017 வரை உரிம நீட்டிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை** : 1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்: 17.06.2014

**2.** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:38 நாள் : 23.06.2014.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 64 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு 01.04.2014 முதல் 31.03.2017 வரை அரசாணையின்படி பழைய வாடகையிலிருந்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து கீழ்க்கண்டுள்ளவாறு உரிம நீட்டிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 38 நாள் 23.06.2014 ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் | தற்போது செலுத்தப்பட்டு வரும் மாத வாடகை (ரூ.) | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை (ரூ.) | உயர்வு செய்யப்பட்ட பின் செலுத்த வேண்டிய மாத வாடகை (ரூ.) | அனுமதிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிட்., திண்டுக்கல் மண்டலம் | 2185/- | 328/- | 2513/- | 01.04.2014 முதல் 31.03.2017 |
| 2 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் லிட்., | 4250/- | 638/- | 4888/- | 01.04.2014 முதல் 31.03.2017 |
| 3 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை கோட்டம் | 4250/- | 638/- | 4888/- | 01.04.2014 முதல் 31.03.2017 |

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்: 16236/2007/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 84 நாள் 25.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 28**

| | |
|---|---|
| பொருள் - | நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 11 முதல் 12-ம் வகுப்பு வரை அறிவியல் பிரிவில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு அறிவியல் கால்குலேட்டர் மற்றும் இதர பிரிவுகளில் பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு சாதாராண கால்குலேட்டர் வழங்குதல் - சார்பாக. |

மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 11-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு கால்குலேட்டர் வழங்க 2014-2015-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக அறிவியல் பிரிவில் பயிலும் மாணவ,மாணவியருக்கு அறிவியல் கால்குலேட்டரும், இதர பிரிவுகளில் பயிலும் மாணவ,மாணவியருக்கு சாதாரண கால்குலேட்டரும் வழங்க 2014-2015-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. 2013-2014-ம் கல்வியாண்டு மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, 1646 மாணவ,மாணவியருக்கு அறிவியல் கால்குலேட்டரும் 3011 மாணவ,மாணவியருக்கு சாதாரண கால்குலேட்டரும் வழங்க தோராயமாக ஏற்படும் மொத்த செலவினம் ரூ.19,52,967/- ஆகும்.

மாமன்றத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டது. மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.26 நாள்.17.06.2014-ன்படி அனுமதிக்கப் பட்டுள்ளது.

மேற்காண் எண்ணிக்கையில் நேரடி விற்பனை நிறுவனமான Rasmi Electricals நிறுவனத்திடமிருந்து CASIO கம்பெனி கால்குலேட்டர்களை கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 4238/2014/ கே 12

**மாநகர மன்ற தீர்மானம் எண் 85 நாள் 25.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

17.02.2014 ம் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக மீண்டும் சமா்ப்பிக்கப்படுகிறது.

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வாா்டு எண்.54, 2012-2015-ம் ஆண்டிற்கான இனம் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண்.4ஐத் தவிர்) கட்டணம் வசூலிக்கும் உரிமம். - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் திரு.இரா. செந்தில்வேல் அவா்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – ஏலத்தொகை செலுத்தாததால் - ஏலத்தொகைகளை பறிமுதல் செய்து – மறு ஏலம் கொண்டுவருவது - தொடா்பாக

பாா்வை 1)திரு.இரா.செந்தில்வேல் அவா்களின் ஒப்பந்தப்புள்ளி நாள்.10.05.2012.
2) மாமன்ற தீா்மான எண்.42. நாள்.30.05.2012.
3).இவ்வலுவலக இறுதி அறிவிப்பு நாள்.06.05.2013.
4).வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.228 நாள்.12.02.2014.

************

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண்.4ஐத் தவிர்) கட்டணம் வசூலிக்கும் உரிமயாணை (2012 – 2015) மூன்று ஆண்டு அடிப்படையில் முதலாம் ஆண்டுக்கு (01.06.2012முதல்31.03.2013 முடிய) கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.இரா.செந்தில்வேல் அவா்களுக்கு மாமன்ற தீா்மான எண்.42, நாள் 30.05.2012-ன் படி ஒரு வருட ஏலத் தொகை ரூ.26,76,000/-க்கு . ஒதுக்கீடு செய்யப்பட்டது. 01.06.2012 முதல் 31.03.2012 வரை உள்ள காலத்திற்கு ஏலத் தொகை ரூ.22,30,000/-, வைப்புத்தொகை மற்றும் பிற தொகைகள் செலுத்தி உரிமத்தினை ஏற்றுக்கொள்ள முதல் மற்றும் இறுதி அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

திரு.இரா.செந்தில்வேல் உரிமதாரா் இதுநாள் வரை ஏலத்தொகை செலுத்தாத காரணத்தால் மேற்படி ஏலதாரா் செலுத்திய தொகை ரூ.5,50,000/-யினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும் இவ்வினத்திற்கு மறு ஏலம் கொண்டு வரவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.228 நாள்.12.02.2014-ல் மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்ப தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண்11130/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 86 நாள் 25.06.2014</u>**

பொருளுக்கு ஒப்புதல் அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

| | |
|---|---|
| பொருள் | கோவை மாநகராட்சி -இந்திய மற்றும் ஐரோப்பிய உள்ளாட்சி அமைப்புகளை ஒருங்கிணைந்து சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் நவீன தொழில் நுட்பம் மற்றும் மின்சக்தி மேம்பாடு மூலம் சிறந்த சுற்றுச் சூழல் நகரம் அமைப்பதற்குரிய கருத்துரு UN-Habitat அமைப்பு மூலம்- புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கும் பகிா்ந்து கொள்ளவும் அனுமதி கோருதல்- சம்பந்தமாக |

இந்திய மற்றும் ஐரோப்பிய உள்ளாட்சி அமைப்புகளை ஒருங்கிணைந்து சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் நவீன தொழில் நுட்பம் மற்றும் மின்சக்தி மேம்பாடு மூலம் சிறந்த சுற்றுச் சூழல் நகரம் அமைப்பதற்குரிய கருத்துரு UN-Habitat அமைப்பு கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் கோரியுள்ளது. மேலும் இக்கருத்துருக்கள் இந்திய அரசு மற்றும் உள்ளாட்சி அளவில் தூய மின்சக்தியினை உருவாக்குதல், செயல்படுத்துதல் ஆகிய வகையில் இந்திய நகரங்கள் சீரிய வளா்ச்சி பெற பொதுத்துறை மற்றும் தனியாா் பங்களிப்புடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள் கோரப்பட்டுள்ளது, தோ்வு செய்யப்பட்டுள்ள இந்திய நகரங்களில் குறைந்த காா்பன் திட்டத்தின் கீழ் நகர வளா்ச்சி மற்றும் மரபுசாரா எரிசக்தி உற்பத்தி மற்றும் மின்சேமிப்பு ஆகிய வகைகளில் துணை செய்யும் வகையிலும் கருத்துரு கோரப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள், சிறு மற்றும் பெருநிறுவனங்கள், வா்த்தகம் மற்றும் குடியிருப்பு கட்டிடங்கள் ஆகியவற்றின் கழிவுகளிலிருந்து சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் மரபுசார எரிசக்தி உற்பத்திசெய்தல், மின்சேமிப்பு ஆகியவற்றில் இந்திய மற்றும் ஐரோப்பிய உள்ளாட்சி அமைப்புகளிடையே தொழில் நுட்பங்களை பகிா்ந்து கொள்ளும் வகையில் இணைப்பு ஏற்படுத்தும் நோக்கில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசின் நகர்புற வளர்ச்சி அமைச்சரகம், திட்டக்குழு, மரபுசாரா எரிசக்தி அமைச்சரகம் ஆகியவை உதவி புரிய முன் வந்துள்ளன. எனவே இது தொடர்பாக விருப்புள்ள நகரங்களிடம் விருப்பு கேட்பு அறிக்கை (EOI) UN-Habitat அமைப்பினால் கோரப்பட்டுள்ளது.

மேலும் நமது மாநகராட்சியால் பல்வேறு மரபுசாரா எரிசக்தி உற்பத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கோயம்புத்தூர் மாநகராட்சியை இத்திட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்து நமது மாநகராட்சியின் விருப்பு கேட்பு அறிக்கை கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இரு நாடுகளின் உள்ளாட்சி அமைப்புகள் இடையே, நகரங்கள் பயன்பெறும் வகையில் மரபு சாரா எரிசக்தி உற்பத்தி மற்றும் மின்சக்தி சேமிப்பு ஆகியவற்றின் தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ள விருப்புகேட்பு அறிக்கை UN-Habitat அமைப்பிற்கு தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இதில் பங்கேற்பதற்கான பதிவு செலவினமோ மற்றும் இதர செலவினமோ ஏற்படுவதில்லை என்ற விபரத்தினை மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் நவீன கருத்துருக்களை தயார் செய்யவும் மற்றும் பரிமாறிக்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். சிறப்பு 2/2014/MD3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 87 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

**பொருள்-** நிலப்பரிவர்த்தனை – உத்தேசம் PSG & Sons அறக்கட்டளை – சௌரிபாளையம் கிராமம் க.ச.எண்.304/1-ல் உள்ள 0.85 ஏக்கர் (0.33 ஹெக்) விஸ்தீரணமுள்ள பட்டா நிலத்தினை அரசுக்கு ஒப்படை செய்தல் - சௌரிபாளையம் கிராமம் 0.82 ஏக்கர் நிலத்தினை அறக்கட்டளைக்கு பரிவர்த்தனை செய்தல் - தொடர்பாக.

**பார்வை-** வட்டாட்சியர், கோயம்புத்தூர் தெற்கு அவர்களின் கடிதம் எண்.2656/2014/ ஆ7 நாள்.11.03.2014.

*****

பார்வையில் கண்டுள்ள கடிதத்தின் அடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. வட்டாட்சியர் கோயம்புத்தூர் தெற்கு, சௌரிபாளையம் கிராமம் PSG & Sons அறக்கட்டளைக்கு உரிய க.ச.எண்.304/1-ல் உள்ள 0.85 ஏக்கர் (0.33 ஹெக்) விஸ்தீரணமுள்ள பட்டா நிலத்தினை அரசுக்கு ஒப்படை செய்து அதற்கு பதிலாக கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், சிங்காநல்லூர் உள்வட்டம், சௌரிபாளையம் கிராமம் க.ச.எண்.305-ல் 0.82 ஏக்கர் (0.33 ஹெக்) விஸ்தீரணமுள்ள புலமானது கணக்குகளில் வண்டிப்பாதை என்ற பதிவினை கொண்டுள்ள அரசு புறம்போக்கு நிலத்தினை PSG & Sons அறக்கட்டளைக்கு பரிவர்த்தனை செய்துகொள்ள கோரியிருப்பதின் பேரில் மாமன்ற தீர்மானம் இயற்றி முன்மொழிவு ஆணை வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பொருள் தொடர்பாக நகரளவையரிடம் குறிப்பு மற்றும் வரைபடம் கோரப்பட்டது. நகரளவையர் 26.05.2014-ம் குறிப்பில் கோவை தெற்கு வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச.எண்.304/1 PSG & Sons அறக்கடைளைக்கு சொந்தமான 85 சென்ட் விஸ்தீரணமுள்ள பூமியை அரசுக்கு ஒப்படை செய்ய உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி வார்டு எண்.28, பிளாட் 18, நகர புல எண்.17-ல் வருகிறது. விஸ்தீர்ணம் 3444 சதுர மீட்டர் ஆகும். இது தற்போது நிலையின் ''மயானம்'' ஆக உள்ளது.

மேலும், க.ச.எண்.305-ல் உள்ள 82 சென்ட் விஸ்தீரணமுள்ள வண்டிபாதை புறம்போக்கு இடம், நகரளவு ஆவணங்களின்படி நகர புல எண்.10 மற்றும் 11-ல் வருகிறது. அதில் நகர புல எண்.10-ல் உள்ள விஸ்தீர்ணம் முழுவதும் PSG மருத்துவமனை கட்டிடங்களையும், நகர புல எண்.11-ல் உள்ள விஸ்தீர்ண பகுதி PSG & Sons நிறுவன அறக்கட்டளைக்கு சொந்தமான இடமாக உள்ளது என குறிப்பு சமர்ப்பித்துள்ளதுடன் விளக்கமான புல வரைபடமும் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் மேற்காணும் அரசுக்கு சொந்தமான வண்டி பாதையின் நிலம் தொடர்ச்சியின்றி PSG & Sons நிறுவன அறக்கட்டளையின் நிலத்தினை மையப்பகுதியிலேயே நிறைவுபெற்று விடுகிறது. எனவே, PSG & Sons அறக்கட்டளைக்கு சொந்தமான நிலத்தினை க.ச.எண்.304 பாகம், சௌரிபாளையம் கிராமம் 85 சென்ட் நிலத்தினை (நிலையில் மயானம்) அரசுக்கு ஒப்படைப்பு செய்யவும், வண்டிப்பாதை என உள்ள நிலத்தினை அறக்கட்டளைக்கு 82 சென்ட் நிலத்தினை பரிவர்த்தனை செய்வது தொடர்பாகவும், மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு எண்.3781/2014/ எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 88 நாள் 25.06.2014</u>**

பொருளுக்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 32**

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கவும் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | மனித வளம் | செலவினத் தொகை (ரூ) (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 25,45,48,49 மற்றும் 50 | 50 | 56.00 |
| 2. | 51,52,53 மற்றும் 54 | 50 | 56.00 |
| 3. | 68,70,71,72,73மற்றும் 74 | 50 | 56.00 |
| 4. | 80,81,82,83 மற்றும் 84 | 38 | 42.00 |
| | மொத்தம் | 188 | 210.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக நிர்வாக அனுமதியும் இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதியும் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம். ந.க.எண் 6776/2013/எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 89 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 33**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கவும் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | மனித வளம் | செலவினத் தொகை (ரூ) (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 93 மற்றும் 94 | 55 | 61.00 |
| 2. | 76,77 மற்றும் 78 | 50 | 56.00 |
| 3. | 99 மற்றும் 100 | 51 | 57.00 |
| 4. | 97 மற்றும் 98 | 60 | 67.00 |
| 5. | 95 மற்றும் 96 | 50 | 56.00 |
| 6. | 79, 85 மற்றும் 86 | 45 | 50.00 |
| 7. | 87, 88 மற்றும் 89 | 45 | 50.00 |
| 8. | 90,91 மற்றும் 92 | 50 | 56.00 |
| | மொத்தம் | 406 | 396.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக நிர்வாக அனுமதியும் இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதியும் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம். ந.க.எண் 6776/2013/எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 90 நாள் 25.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 34**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கவும் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | மனித வளம் | செலவினத் தொகை (ரூ) (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 5 மற்றும் 23 | 55 | 61.00 |
| 2. | 6 மற்றும் 21 | 52 | 58.00 |
| 3. | 7 மற்றும் 18 | 57 | 63.00 |
| 4. | 8 மற்றும் 10 | 52 | 58.00 |
| 5. | 9 மற்றும் 11 | 52 | 58.00 |
| 6. | 12 மற்றும் 16 | 55 | 61.00 |
| 7. | 19,20 மற்றும் 22 | 59 | 66.00 |
| 8. | 13,14 மற்றும் 24 | 53 | 59.00 |
| 9. | 15 மற்றும் 17 | 54 | 60.00 |
| | மொத்தம் | 489 | 544.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக நிர்வாக அனுமதியும் இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதியும் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– அனுமதிக்கலாம். ந.க.எண் 6776/2013/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 91 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 35**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கவும் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | மனித வளம் | செலவினத் தொகை (ரூ) (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 27,28 மற்றும் 29 | 55 | 61.00 |
| 2. | 30 மற்றும் 55 | 37 | 41.00 |
| 3. | 42,43 மற்றும் 44 | 65 | 72.00 |
| 4. | 46 மற்றும் 47 | 49 | 54.00 |
| 5. | 31,38 மற்றும் 39 | 68 | 75.00 |
| 6. | 40 மற்றும் 41 | 58 | 64.00 |
| 7. | 1, 2 மற்றும் 3 | 50 | 56.00 |
| 8. | 4 மற்றும் 26 | 32 | 36.00 |
| | மொத்தம் | 414 | 459.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக நிர்வாக அனுமதியும் இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதியும் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம். ந.க.எண் 6776/2013/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 92 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 36**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கவும் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | மனித வளம் | செலவினத் தொகை (ரூ) (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 32,33,34,3536 மற்றும் 37 | 65 | 72.00 |
| 2. | 56,57,58 மற்றும் 59 | 62 | 69.00 |
| 3. | 60, 61 மற்றும் 62 | 65 | 72.00 |
| 4. | 63, 64 மற்றும் 65 | 65 | 72.00 |
| 5. | 66 மற்றும் 67 | 55 | 61.00 |
| 6. | 69 மற்றும் 75 | 46 | 51.00 |
| | மொத்தம் | 358 | 397.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக நிர்வாக அனுமதியும் இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதியும் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம். ந.க.எண் 6776/2013/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 93 நாள் 25.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 37**

பொருள் பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளில் ஆஜராக திரு ஆர் சிவக்குமார் வழக்கறிஞர், சென்னை அவர்களை மீண்டும் கோயம்புத்தூர் மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்யதல் - தொடர்பாக.

பார்வை 1. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் கடித எண்.356/2012/எம்.சி.10 நாள் 6.3.2013.
2. ஆர்.சிவக்குமார் வழக்கறிஞர் கடித நாள் 12.3.2013 மற்றும் 30.3.2013
3. ஆர்.சிவக்குமார் வழக்கறிஞர் கடித நாள் 20.6.2014

*********

பார்வை 1ல் கண்ட ஆணையாளர் அவர்களின் கடிதத்தில் தீர்மான எண்.391 நாள் 22.2.2013-ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சி உயர்நீதிமன்ற நிலை வழக்கறிஞர் பணியிலிருந்து விடுவிக்க அனுமதித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சி சம்மந்தப்பட்ட வழக்குகளில் பொறுப்பேற்க வேண்டாம் என உத்திரவிடப்பட்டது.

பார்வை 2ல் கானும் கடிதங்களில் வழக்கறிஞர் ஆர்.சிவக்குமார் அவர்கள் தன்மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது என்றும் விசாரணை எதுவும் செய்யாமல் தன்னை வழக்கறிஞர் பணியிலிருந்து விடுவித்தது இயற்கை நீதிக்கு எதிரானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பார்வை 3ல் கானும் கடிதத்தில் ஆர்.சிவக்குமார் அவர்கள், தான் 1996 ஆம் ஆண்டுமுதல் கோயம்புத்தூர் மாநகராட்சி வழக்கறிஞராக பணி செய்து வருவதாகவும் நகரமைப்பு பிரிவு தொடர்பான மாநகராட்சி நில அபகரிப்பு வழக்குகளில் ஆஜராகி தனி நபர்களிடமிருந்து நிலத்தினை மீட்டு தந்துள்ளதாகவும் அதனால் அப்போதைய ஆணையாளர் திரு கார்த்திகேயன் அவர்களிடம் பாராட்டு கடிதம் 31.8.2002-ல் பெற்று உள்ளதாகவும் மேலும் கடந்த ஒரு வருடமாக மாநகராட்சி சம்மந்தப்பட்ட மிக முக்கியமான வழக்குகளில் ஆஜராகி மாநகராட்சிக்கு வெற்றியையும் தன் வழக்கறிஞர் பணியையும் திறம்பட செய்திருப்பதாகவும் கூறியுள்ளார். எனவே தனக்கு மீண்டும் கோயம்புத்தூர் மாநகராட்சி நிலை வழக்கறிஞர் பணி வழங்க கோரியுள்ளார்.

வழக்கறிஞர் ஆர்.சிவக்குமார் அவர்களை மீண்டும் கோயம்புத்தூர் மாநகராட்சி நிலை வழக்கறிஞராக பணி நியமனம் செய்ய மன்றத்தின் முடிவுக்காக பொருள் சமர்ப்பிக்கப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் முடிவுக்கு ந.க.எண்.10439/2009/எம்.சி.10

**மாநகர மன்ற தீர்மானம் எண் 94 நாள் 25.06.2014**

பொருளுக்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
கோயம்புத்தூர் மாநகராட்சி